# S.I.R.க்கு எதிராக அணி திரண்ட 'இந்தியா' கூட்டணியினர்!



அரியலூர் மாவட்டத்தில் கழகத் தலைவர், முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, ஒன்றிய பா.ஜ.க. அரசின் கை பாவையாகச் செயல்படும் இந்திய தேர்தல் ஆணையத்தைக் கண்டித்தும், வாக்காளர் பட்டியலைச் சீர்குலைக்கும் S.I.R. சதித்திட்டத்தை எதிர்த்தும், தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழிகாட்டுதலின்படி அரியலூரில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணை செயலாளர் சுபா. சந்திரசேகர் தலைமையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர், மாநிலங்களவை உறுப்பினர் திருச்சி சிவா கண்டன உரையாற்றினார், உடன் அரியலூர் சட்டமன்ற உறுப்பினர்கள் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் உள்பட கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய,நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழக தோழர்கள், மதசார்பற்ற முற்போக்கு கூட்டணிகட்சியின் நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.



பெரம்பலூர் மாவட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் எஸ்.ஐ.ஆர். க்கு எதிராக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மேனாள் ஒன்றிய அமைச்சர் கழகத் துணைப்பொதுச் செயலாளர் ஆ.இராசா.எம்.பி., கலந்து கொண்டு பேசினார். இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், எம். பிரபாகரன் எம்.எல்.ஏ., மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் உள்ளனர்.நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் 5 ஆயிரம் பேர் கலந்து கொண்டனர்.



எஸ்.ஐ.ஆர். க்கு எதிராக கோவை, சிவானந்தா பகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர் வி.செந்தில்பாலாஜி தலைமையில், கோவை மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன் கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் ஆகியோர் முன்னிலையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் கொங்கு நாடு மக்கள் கட்சி தேசிய கட்சி தலைவர் ஈ.ஆர்.ஈஸ்வரன், ஆதிதமிழர் நிறுவன தலைவர் இரா.அதியமான் உள்பட கழக நிர்வாகிகள், கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



ஒன்றிய பா.ஜ.க அரசு தேர்தல் ஆணையத்தோடு கூட்டணி சேர்ந்து செய்யும் எஸ்.ஐ.ஆர் க்கு எதிராக ஈரோடு மாவட்டத்தில் 'இந்தியா' கூட்டணி கட்சிகளின் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் கழக நிர்வாகிகள், இந்திய கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.



நாமக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நாமக்கல் மோகனூர் சாலையில் பி.எஸ்.என்.எல். அலுவலகம் எதிரே தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க தமிழ்நாட்டின் எஸ்.ஐ.ஆர். சீராய்வை தேர்தல் ஆணையம் உடனே கைவிட வேண்டும், ஒன்றிய பாஜக அரசைக் கண்டித்தும் கண்டன ஆர்ப்பாட்டம் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான. கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், மேற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில், நாமக்கல் பாராளுமன்ற மக்களவை உறுப்பினர் வி.எஸ்.மாதேஸ்வரன், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம் மற்றும் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், காங்கிரஸ், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், கம்யூனிஸ்ட், விசிக, மனிதநேய மக்கள் கட்சி உள்ளிட்ட கூட்டணி கட்சியினர், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



நீலகிரி மாவட்டம் உதகையில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகள் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்டம் தி.மு.க. பொறுப்பாளர் கே.எம்.ராஜு தலைமையில் நடைபெற்றது.



புதுக்கோட்டை அண்ணா சிலை பின்புறம் உள்ள டாக்ஸி ஸ்டாண்ட் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் நடைபெற்றது. இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப்பித்தன், உதயம் சண்முகம், கார்த்திக் தொண்டைமான், மாநில, மாவட்ட நிர்வாகிகள் த.சந்திரசேகரன், சுப.சரவணன், கே.ஆர்.என்.போஸ், செ.அசோக்பாண்டியன், அரு.வீரமணி, அ.சுப்பிரமணியன், க.மதியழகன், ஞான. இளங்கோவன், ஸ்ரீதேவி அண்ணாத்துரை, அடைக்கலம், கீரை.தமிழ் ராஜா, சு.சண்முகம், இரா.ஆனந்த், எஸ்.ஜெயராமன், எம்.லியாகத் அலி, வே.ராஜேஸ் உள்பட தி.மு.க. கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர்.



தருமபுரியில் ஒன்றிய பா.ஜ.க. அரசின் கை பாவையாக மாறி தமிழ்நாட்டில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு S.I.R கொண்டு வந்துள்ள இந்தியத் தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் தருமபுரி மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முனைவர். பி.பழனியப்பன் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நகர பி.எஸ்.என்.எல் அலுவலகம் முன்பு நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் மாவட்டச் செயலாளர்கள் தடங்கம்.பெ.சுப்ரமணி, பி.என்.பி.இன்பசேகரன், தருமச்செல்வன், மாது, நகர செயலாளர்கள் நாட்டான்.மாது, எம்.பி.கௌதம், முல்லை ரவி,நகர் மன்ற தலைவர் லட்சுமிமாது மற்றும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினர் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், வார்டு செயலாளர்கள், அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளிட்ட 3000 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.